# வகுப்பு - 8 - விலங்கியல், , 16. நுண்ணுயிரிகள்

**பயிற்சி வினாக்கள்:**

1. நுண்ணுயிரிகள் கீழ்க்கண்ட எந்த அலகால் அளவிடப்படுகின்றன?

   (1) செ.மீ (2) மி.மீ (3) மைக்ரான் (4) மீட்டர்

2. கீழ்க்கண்டவற்றுள் உயிருள்ள மற்றும் உயிரற்ற பண்புகளை பெற்றது எது?

   (1) புரோட்டோசோவா (2) வைரஸ் (3) பாக்டீரியா (4) பூஞ்சை

3. கீழ்க்கண்டவற்றுள் எது புரோகேரியாட்டிக் நுண்ணுயிரி?

   (1) வைரஸ் (2) ஆல்கா (3) பூஞ்சை (4) பாக்டீரியா

4. பாக்டீரியாக்கள் வடிவத்தின் அடிப்படையில் எத்தனைப் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன?

   (1) 2 (2) 3 (3) 4 (4) 5

5. கீழ்க்கண்டவற்றுள் மனிதர்களில் சாதாரண சளியை உண்டாக்குவது எது?

   (1) பிளாஸ்மோடியம் (2) இன்ஃபுளுயன்ஸா

   (3) விப்ரியோ காலரே (4) ஆப்தோ வைரஸ்

6. வைராலஜி என்பது கீழ்க்கண்ட எதனைப் பற்றிய படிப்பு?

   (1) ஆல்கா (2) வைரஸ் (3) பூஞ்சை (4) வைரம்

7. வைரஸ் மையப்பகுதியில் கீழ்கண்ட எதைக் கொண்டுள்ளது?

   (1) டி.என்.ஏ (2) ஆர்.என்.ஏ

   (3) டி.என்.ஏ மற்றும் ஆர்.என்.ஏ (4) டி.என்.ஏ அல்லது ஆர்.என்.ஏ

8. வைரஸ்கள் ஓம்புயிரி செல்களில் ஒட்டிக்கொள்ள கீழ்கண்ட எது உதவுகிறது?

   (1) கசையிழை (2) போலிக்கால்கள்

   (3) கூர்முனை (ஸ்பைக்) (4) சிலியா

9. வைரஸ்கள் கீழ்கண்ட எதற்கு பதில் வினைபுரிகின்றன?

   (1) வெப்பம் (2) வேதிப்பொருள்

   (3) கதிரியக்கம் (4) மேற்கண்ட அனைத்தும் சரி

10. வைரஸ்கள் பற்றிய கீழ்கண்ட கருத்துகளில் தவறானது எது (எவை)?

    (i) வைரஸ்கள் உயிருள்ள மற்றும் உயிரற்ற பண்புகளைக் கொண்டது

    (ii) வைரஸ்கள் செல்லுக்கு வெளியே பெருக்கமடைந்து சந்ததிகளை உருவாக்கும்

    (iii) தன்னிச்சையான சூழலில் செயலற்றுக் காணப்படும்

LIVEWORKSHEETS

(iv) படிகமாக்கி நீண்ட நாட்கள் வைத்திருக்க முடியும்

(1) i மற்றும் iv (2) i மட்டும் (3) ii மட்டும் (4) iv மட்டும்

11. பூமியின் மீது முதன் முதலில் தோன்றிய வாழும் உயிரினமாகக் கருதப்படுவது எது?

(1) பாசி (2) வைரஸ் (3) பாக்டீரியா (4) பூஞ்சை

12. பாக்டீரியா கீழ்க்கண்ட எந்த அளவுடையது?

(1) 10 μm முதல் 15 μm (2) 20 μm முதல் 25 μm

(3) 10 μm முதல் 100 μm (4) 1 μm முதல் 5 μm

13. பாக்டீ யா வகைப்பாட்டியலில் எந்த உலகத்தின் கீழ் உள்ளது?

(1) புரோடிஸ்டா (2) மொனிரா (3) பூஞ்சைகள் (4) விலங்குகள்

14. பாக்டீரியாவின் உட்கரு பொருள்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது

(1) நியூக்ளியாய்டு (2) தைலக்காய்டு (3) பைரினாய்டுகள் (4) ஜீன்கள்

15. பாக்டீ யாவைப் பற்றிய படிப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது

(1) வைராலஜி (2) பாக்டீ யாலஜி (3) பைக்காலஜி (4) மைக்காலஜி

16. பாக்டீரியாவில் புரதச்சேர்க்கை கீழ்க்கண்ட எந்த வகை ரிபோசோம்களால் நடைபெறும்?

(1) 70 S (2) 80 S (3) 90 S (4) 85 S

17. பாக்டீரியா பற்றிய கருத்தில் கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?

(i) மைட்டோகாண்ட்ரியா (ii) கோல்கை உறுப்புகள்

(iii) எண்டோபிளாச வலைப்பின்னல் (iv) கசையிழை

(1) i மற்றும் iv (2) i மட்டும் (3) ii மட்டும் (4) iv மட்டும்

18. கீழ்க்கண்டவற்றுள் பாக்டீரியாவின் இடப்பெயர்ச்சிக்கு உதவுவது எது

(1) போலிக்கால்கள் (2) கசையிழை (3) சிலியா (4) குறுஇழை

19. பின்வருவனவற்றுள் சரியான இணை எது?

(1) கோல் வடிவம் - விப்ரியோ காலரே

(2) சுருள் வடிவம் - ஸ்ட்ரெப்டோகாக்கஸ்

(3) கமா வடிவம் - பேசில்லஸ் ஆந்த்ராசிஸ்

(4) கோள வடிவம் - டிப்ளோகாக்கஸ்

20. பின்வருவனவற்றுள் தவறான இணை எது?

(1) ஒற்றைக் கசையிழை - விப்ரியோ காலரே

(2) ஒரு முனை கற்றைக் கசையிழை - சூடோமோனாஸ்

LIVEWORKSHEETS

(3) இரு முனை கற்றைக் கசையிழை - ரோடோஸ்பைரில்லம் ரூபரம்

(4) சுற்றுக் கசையிழை - கோரினிபாக்டீரியம் டிப்தீரியா

21. கீழ்க்கண்ட எந்த பாக்டீரியாவில் செல் சுவரைச் சுற்றிக் கசையிழை காணப்படுகிறது?

(1) கோரினிபாக்டீரியம் (2) எ.கோலை

(3) விப்ரியோ காலரே (4) சூடோமோனாஸ்

22. வேதித் தற்சார்பு உணவூட்டம் கொண்ட பாக்டீரியாக்கள் கீழ்க்கண்ட எந்த வேதிப்பொருள்களை பயன்படுத்தி உணவு தயாரிக்கின்றன?

(1) அம்மோனியா மற்றும் ஹைட்ரஜன் சல்பைடு

(2) அம்மோனியா மற்றும் சல்பர் ஆக்சைடு

(3) அம்மோனியா மற்றும் இரும்பு சல்பைடு

(4) அம்மோனியா மற்றும் மெக்னீசியம் சல்பைடு

23. சயனோபாக்டீ யா பற்றிய கருத்தில் எது சரியானது?

(1) அம்மோனியா பயன்படுத்தி உணவு தயாரித்துக்கொள்கின்றன.

(2) ஹைட்ரஜன் சல்பைடு பயன்படுத்தி உணவு தயாரித்துக்கொள்கின்றன.

(3) அம்மோனியா மற்றும் ஹைட்ரஜன் சல்பைடு மூலம் உணவு தயாரித்துக்கொள்கின்றன.

(4) ஒளிச்சேர்க்கை மூலம் உணவைத் தயாரித்துக்கொள்கின்றன.

24. மனிதனின் சிறுகுடலில் வாழும் பாக்டீரியா எது?

(1) சூடோமோனாஸ் (2) விப்ரியோ காலரே

(3) கோரினிபாக்டீரியம் டிப்தீரியா (4) எ. கோலை

25. கீழ்க்கண்டவற்றுள் கூட்டுயிரி வாழ்க்கை முறையினை மேற்கொள்ளும் பாக்டீரியா எது?

(1) எ.கோலை (2) சயனோ பாக்டீரியம்

(3) விப்ரியோ காலரே (4) சூடோமோனாஸ்

26. கீழ்க்கண்டவற்றுள் ஒரு செல் பூஞ்சை எது?

(1) பெனிசிலியம் (2) ஈஸ்ட் (3) ரைசோபஸ் (4) மியூக்கர்

27. பூஞ்சைகள் பற்றிய படிப்பு எது?

(1) பைக்காலஜி (2) மைக்காலஜி (3) பைட்டாலஜி (4) பயாலஜி

28. ஈஸ்ட்கள் கீழ்க்கண்ட எந்த நொதியின் மூலம் நொதித்தலில் ஈடுபடுகின்றன?

(1) அமைலேஸ் (2) சுக்ரேஸ் (3) சைமேஸ் (4) மால்டேஸ்

29. மொட்டு விடுதல் முறையில் இனப்பெருக்கம் செய்வது எது?

LIVEWORKSHEETS

(1) வைரஸ் (2) பாக்டீ யா (3) பூஞ்சை (4) யூக்ளினா

30. கீழ்க்கண்டவற்றுள் நீர்புற்கள் எனப்படுவது எது?

(1) வைரஸ் (2) சயனோபாக்டீரியா (3) பாக்டீரியா (4) ஆல்கா

31. பாசிகளைப் பற்றிய படிப்புகளில் சரியானவை எவை?

(i) ஆல்காலஜி (ii) மைகாலஜி (iii) பைக்காலஜி (iv) பைட்டாலஜி

(1) i மற்றும் iv (2) ii மற்றும் iii (3) i மற்றும் iii (4) iii மற்றும் iv

32. கீழ்க்கண்டவற்றுள் எது பாசி அல்ல?

(1) கிளாமிடோமோனாஸ் (2) வால்வாக்ஸ்

(3) சூடோமோனாஸ் (4) ஹல்வா

33. கீழ்க்கண்டவற்றுள் ஒரு செல் பாசி எது?

(1) சர்காசம் (2) கிளாமிடோமோனாஸ்

(3) யூக்ளினா (4) பாரமீசியம்

34. கிளாமிடோமோனாஸ் பாசி பற்றிய கருத்துக்களில் தவறானது எது / எவை?

(i) ஒரு செல்லால் ஆன பாசி (ii) நன்னீர் வாழ் பாசி

(iii) முட்டை அல்லது பேரிக்காய் வடிவம் உடையது (iv) நகரும் திறன் அற்றது

(1) i மற்றும் iv (2) iii மற்றும் iv (3) i மட்டும் (4) iv மட்டும்

35. கிளாமிடோமோனாஸ் பற்றிய கருத்துகளில் தவறானது எது?

(i) செல்லுலோசினால் ஆன செல் சுவரினால் சூழப்பட்டுள்ளது

(ii) கோப்பை வடிவ பசுங்கணிகம் காணப்படுகிறது

(iii) சிலியாக்கள் மூலம் இயக்கம் மேற்கொள்கிறது

(iv) சிவப்பு நிறத்தாலான கண்புள்ளியைக் கொண்டுள்ளது

(1) i மற்றும் iv (2) iii மட்டும் (3) i மட்டும் (4) iv மட்டும்

LIVEWORKSHEETS